புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • மே 16, 2024 • புரட்சி 24 • முழக்கம் 18 • விலை ரூ.3.00

# தபோல்கர் கொலையாளிகளை தப்பவிட்ட சிபிஐ!
## சிசிடிவி ஆதாரங்கள் கூட சேகரிக்கப்படாத அவலம்!

சமூக செயற்பாட்டாளரும், மகாராஷ்டிரா மூடநம்பிக்கை ஒழிப்புக் குழுவின் தலைவருமான நரேந்திர தபோல்கர் 2013ம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் தேதி காலை நேரத்தில் புனேவில் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருடைய மூடநம்பிக்கை ஒழிப்புப் பணிகளுக்கு இந்துத்துவ அமைப்பான சனாதன் சன்ஸ்தா கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில் இக்கொலை நடந்தது. தபோல்கர் கொலை வழக்கை முதலில் புனே போலீசார் விசாரித்தனர். பின்னர் பம்பாய் உயர்நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, 2014-ல் சிபிஐ விசாரணையை மேற்கொண்டது. இந்த வழக்கில் சனாதன் சன்ஸ்தா அமைப்பைச் சேர்ந்த மருத்துவர் வீரேந்திரசிங் தவாடேவை 2016-ஆம் ஆண்டு ஜூன் மாதம் சிபிஐ கைது செய்தது.

மேலும், சச்சின் அன்டுரே, ஷரத் கலாஸ்கர் ஆகியோர் தபோல்கரை சுட்டுக் கொன்றதாக சிபிஐ குற்றம்சாட்டியது. நரேந்திர தபோல்கர் கொல்லப்பட்ட அதே பாணியில் கோவிந்த் பன்சாரே (2015), கல்புர்கி (2015), கவுரி லங்கேஷ் (2017) என முற்போக்காளர்கள் அடுத்தடுத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்து மதத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கு, மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் பேசியவர்கள், களத்தில் செயல்பட்டவர்கள் தேடித்தேடி கொல்லப்பட்டதன் பின்னணியில் மிகப்பெரிய சதித்திட்டம் இருப்பதும், சனாதன் சன்ஸ்தா என்கிற இந்துத்துவ பயங்கரவாத அமைப்பே அதன் பின்னணியில் இருப்பதும் விசாரணையில் அம்பலமானது.

இந்நிலையில் நரேந்திர தபோல்கர் வழக்கில் சுமார் பத்தரை ஆண்டுகளுக்குப் பிறகு, புனேவில் உள்ள சிறப்பு நீதிமன்றம் மே 10-ஆம் தேதி தீர்ப்பு வழங்கியுள்ளது. நீதிபதி பிபி ஜாதவ் அளித்த தீர்ப்பில், சச்சின் அன்டுரே, ஷரத் கலாஸ்கர் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.5 லட்சம் அபராதம் விதித்துள்ளார். ஆனால் மூளையாகச் செயல்பட்ட வீரேந்திரசிங் தவாடே, சஞ்சீவ் புனலேகர், விக்ரம் பாவே ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லாததால் நீதிமன்றம் அவர்களை விடுவித்துள்ளது.

### கொலையாளிகளை தப்பவிட்ட சிபிஐ

கொலைக்கான காரணத்தையும், கொலைக்கு




மூளையாகச் செயல்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டையும் சிபிஐ நிரூபிக்கத் தவறிவிட்டதாக நீதிமன்றம் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது. “சச்சின் அன்டுரே, ஷரத் கலாஸ்கர் ஆகிய இருவரும் கொலை செய்வதற்கான கருவியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளனர். இந்தக் குற்றத்தின் பின்னணியில் முக்கிய மூளையாக வேறு ஒருவர் இருக்கிறார். புனே காவல்துறையும், சிபிஐயும் அந்த நபரைக் கண்டறியத் தவறிவிட்டன. இது அவர்களின் தோல்வியா அல்லது அதிகாரத்தில் இருப்பவர்களின் செல்வாக்கின் காரணமாக செயல்படாமல் அமைதி காத்தனரா என்பதை அவர்களே சுயபரிசோதனை செய்ய வேண்டும்” என்று நீதிபதி காட்டமாகக் கூறியுள்ளார்.



வீரேந்திரசிங் தவாடேதான் கொலைக்கான மாஸ்டர் மைண்ட் என்று புனே காவல்துறையும், சிபிஐ-யும் குற்றப்பத்திரிகையில் அடையாளம் காட்டின. சனாதன் சன்ஸ்தா மற்றும் அதனுடன் தொடர்புடைய அமைப்பான இந்து ஜன்ஜக்ருதி சமிதியில் முழுமையாக ஈடுபடுவதற்கு முன்புவரை வீரேந்திரசிங் தவாடே மருத்துவராக செயல்பட்டுள்ளார். தபோல்கர் பகுத்தறிவாளர், மூட நம்பிக்கை எதிர்ப்பாளர் என்பதாலேயே அவர் மீது வீரேந்திரசிங் தவாடேவுக்கு தனிப்பட்ட பகை இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த பின்னணியில்தான் கொலை நடந்திருக்கிறது. ஆனால் தவாடே மீதான குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களைத் திரட்ட சிபிஐ தவறிவிட்டது.

### சிசிடிவி ஆதாரம் கூட இல்லை

இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட 20 சாட்சியங்களில் சஞ்சய் அருண் சத்வில்கர் மிக முக்கியமானவர். 2004 இல் தபோல்கர் ஒரு பொது நிகழ்ச்சிக்காக கோலாப்பூருக்குச் சென்றிருந்தபோது, தவாடே தபோல்கருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக சத்வில்கர் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். அதுமட்டுமின்றி, தபோல்கர் கொல்லப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பு, சத்வில்கரிடம் ஒரு கைத்துப்பாக்கி செய்துத் தருமாறு தவாடே கேட்டிருக்கிறார். இதை அவர் வாக்குமூலமாகக் கொடுத்துள்ள போதிலும், கொலையில் தவாடேவின் பங்கை நிரூபிக்க சிபிஐ தவறியிருக்கிறது.

அதேபோல மும்பையைச் சேர்ந்த வழக்கறிஞர் புனலேகர், 2008 ஆம் ஆண்டு தானே மற்றும் பன்வெல் குண்டுவெடிப்பு உட்பட பல பயங்கரவாத வழக்குகளில் இந்து அடிப்படைவாதிகள் சார்பில் ஆஜரானவர். 2017-இல் கவுரி லங்கேஷை சுட்டுக் கொன்ற பிறகு துப்பாக்கியை ஒரு சிற்றோடையில் எறிந்து விடுமாறு புனலேகர் அறிவுறுத்தியதாக கொலையாளிகள் கூறியுள்ளனர். அதையும் சிபிஐ நிரூபிக்கத் தவறியதால், புனலேகரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார். புனலேகரின் உதவியாளர் பாவே கொலையாளிகளான சச்சின் அன்டுரே, ஷரத் கலாஸ்கருடன் இருந்துள்ளார். ஆனால் அதற்கான ஒரு சிசிடிவி ஆதாரத்தைக் கூட சிபிஐ முன்வைக்கவில்லை. தபோல்கர் கொல்லப்பட்ட தெருவானது எப்போதும் மக்கள் அதிகமாக புழங்கும் பகுதிதான். அப்படிப்பட்ட இடத்தில் இருந்துகூட சிபிஐயால், ஒரு சிசிடிவி காட்சியை சமர்ப்பிக்க முடியவில்லை என்பதில் இருந்தே கொலையாளிகளை காக்க வேண்டுமென்ற நோக்கத்தை மிக எளிமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

### இந்து விரோதி முத்திரை குத்துவதா?

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பிரகாஷ் சல்சிங்கிகர், கொலையாளிகளின் செயலை நியாயப்படுத்தும் வகையிலான வாதங்களை வைத்துள்ளார். இந்துக் கடவுள்களை அவமதித்ததால் தபோல்கர் வெறுக்கப்படுகிறார் என்ற தொனியில் அவரது வாதங்கள் இருந்தன. “தபோல்கரை இந்து விரோதி என்று முத்திரைக் குத்தி, கொலையை நியாயப்படுத்தும் வகையில் இந்த வாதம் உள்ளது. இந்த அணுகுமுறையானது மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்த கொலை நிச்சயம் சச்சின் அன்டுரே, ஷரத் கலாஸ்கர் ஆகியோர் மட்டும் செய்ததல்ல. முன்கூட்டியே திட்டமிடப்பட்டு தெளிவாக நிகழ்த்தப்பட்ட கொலை. ஆனால் அந்த முகமூடியை அவிழ்க்க அரசு தவறிவிட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் சனாதன் சன்ஸ்தாவுடன் தொடர்புடையவர்கள் என்பது குறுக்கு விசாரணையிலேயே ஒப்புக் கொள்ளப்பட்டது. சனாதன் சன்ஸ்தா, இந்து ஜன்ஜக்ருதி சமிதி மற்றும் அதனுடன் இணைந்த இந்து அமைப்புகள் கடுமையான பகையை வளர்த்து வருகின்றன என்பதும் தெளிவாகிறது” என்று நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

### தபோல்கரோடு முடியப் போவதில்லை!

இது தபோல்கர் வழக்கோடு மட்டும் முடிந்துவிடப் போவதில்லை. இதே நபர்கள்தான் கோவிந்த் பன்சாரே, கல்புர்கி, கவுரி லங்கேஷ் கொலையிலும் தொடர்புடையவர்களாக இருப்பதால் அந்த வழக்குகளிலும் குற்றவாளிகள் தப்பிப்பதற்கான கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறது. ஏனென்றால், கவுரி லங்கேஷைக் கொல்லப் பயன்படுத்திய துப்பாக்கியின் பகுப்பாய்வுதான், கல்புர்கியின் கொலைக்கும் அதே துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டது என்பதை உறுதி செய்தது. நான்கு கொலைகளிலும் பல பொதுவான அம்சங்கள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன. நால்வரும் செய்த முற்போக்கு பரப்புரையை வேறு யாரும் செய்யக்கூடாது என்ற நோக்கம் இருந்ததும் தெளிவாகிறது. கவுரி லங்கேஷ் கொலையில் சச்சின் அன்டுரே, ஷரத் கலாஸ்கர் பங்கு கண்டறியப்பட்ட பின்பே, மகாராஷ்டிராவில் அவர்கள் இருவரும் 2018ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டனர். உண்மையில் சித்தராமையா அரசு இந்த விசாரணையில் வேகம் காட்டும் வரை, தபோல்கர் கொலை விசாரணையில் சிபிஐ எந்தத் துரும்பையும் கிள்ளிப் போடவில்லை.

இது நாடு முழுக்க இருக்கிற முற்போக்காளர்கள், பகுத்தறிவாளர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கிற



நேரடி எச்சரிக்கையாகவே இருக்கிறது. இந்து மதத்தின் பாகுபாடுகள், பிற்போக்குத்தனங்களுக்கு எதிராகப் பேசினால் கொலை செய்யப்படுவீர் என்று சனாதன் சன்ஸ்தா அமைப்பு விடுக்கும் எச்சரிக்கையாகவும், அப்படி கொல்லப்பட்டாலும் குற்றவாளிகளை விசாரித்து தண்டனை பெற்றுத் தர மாட்டோம் என்று சிபிஐ அமைப்பும் விடுக்கிற எச்சரிக்கையாகவே இத்தீர்ப்பு அமைந்திருக்கிறது. இது ஜனநாயகத்திற்கு பேராபத்தானது. தபோல்கர் வழக்கின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக அவரின் மகன் ஹமீத் தபோல்கர் மற்றும் மகள் முக்தா தபோல்கர் தெரிவித்திருக்கின்றனர். சனாதன் சன்ஸ்தா இந்துத்துவ அமைப்பை பயங்கரவாத அமைப்பாக ஒன்றிய உள்துறை அமைச்சகம் அறிவிக்க வேண்டும். பயங்கரவாத செயலுக்கு துணைபோகிற அதிகாரிகளையும் உள்ளடக்கி மறு விசாரணை நடத்தப்பட்டு, கொலையாளிகளும், கொலைக்கு துணைபோனவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். அதுவே தபோல்கரின் கொலைக்கு கிடைக்கும் நியாயமான நடவடிக்கை.

தலையங்கம்

# தேர்தல் ஆணையத்தை காணவில்லை!

நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான 4 கட்ட வாக்குப்பதிவு முடிந்துவிட்டது. முதல்கட்ட தேர்தலுக்கு முன்பு தமிழ்நாட்டிலேயே சுற்றிக் கொண்டிருந்த நரேந்திர மோடி, ராமர் கோயில் குறித்தோ இசுலாமியர்கள் குறித்தோ ஒரு வார்த்தைக் கூட பேசவில்லை. திமுகவை மட்டுமே குறிவைத்துத் தாக்கிக் கொண்டிருந்தார். ஆனால் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான பரப்புரையை தொடங்கிய நாளில் இருந்தே மத வெறுப்பை மட்டுமே உமிழ்ந்து கொண்டிருக்கிறார். ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் பேசிய மோடி, ‘‘நீங்கள் உழைத்து சம்பாதித்த பணத்தையும், சொத்துக்களையும் ஊடுருவல்காரர்களுக்கு, அதிக குழந்தைகளைப் பெற்றவர்களுக்கு கொடுக்க காங்கிரஸ் கட்சி பார்க்கிறது. தாய்மார்களே, சகோதரிகளே உங்கள் மங்கள சூத்திரத்தைக் கூட அவர்கள் விட்டு வைக்க மாட்டார்கள்’’ என்றும், ‘‘இறந்த பிறகும் ஒருவருக்கு வரி விதிக்க காங்கிரஸ் கட்சியிடம் திட்டம் உள்ளது’’ என்றும் பேசினார்.

கர்நாடக மாநிலம் கலபுர்கியில் பேசும்போது, ‘‘ராமர் கோயில் நிறுவப்பட்ட நிகழ்ச்சியில் கூட பங்குகொள்ளாத காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்காதீர்கள்’’ என்றார். நவாப்களின் அட்டூழியங்கள் குறித்து ராகுல் காந்தி பேசாமல் அமைதி காப்பதாகக் கூறினார். இதுவரை இருந்த எந்த பிரதமர்களும் இப்படி நேரடியாக இசுலாமியர்களைத் தரக்குறைவாகத் தாக்கிப் பேசியதே இல்லை. மதம் சார்ந்த கருத்துக்களை தெரிவிக்கக்கூடாது என்ற தேர்தல் நடத்தை விதிகளை மீறி துணிச்சலாகப் பேசிய மோடி மீது அடுக்கடுக்கான புகார்கள் குவிந்தும் எந்த நடவடிக்கையும் தேர்தல் ஆணையத்தால் எடுக்கப்படவில்லை. தேர்தல் ஆணையத்தை காணவில்லை என்று ஆட்கொணர்வு மனு தொடுக்கும் நிலையில் பரிதாபமாகவும், பாரபட்சமாகவும் இருக்கிறது தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள்.

இத்தகைய வெறுப்புப் பேச்சு மோடியோடு மட்டும் நின்றுவிடவில்லை. மோடியின் பேச்சை வழிமொழிந்து பாஜகவைச் சேர்ந்த பலரும் இசுலாமிய வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம் தனிநபர் சட்டமாக ஷரியத்தை பின்வாசல் வழியாக கொண்டு வரும் என்று அமித்ஷா கூறியுள்ளார். அதை காங்கிரஸ் கட்சி தேர்தல் வாக்குறுதியாக அளித்திருப்பதாக உ.பி. முதல்வர் ஆதித்யநாத் கூறுகிறார். ஆயுதப் படைகளிலும் ராகுல் காந்தி ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்தப் போகிறார் என்றும், சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு வழங்கப் போகிறார் என்றும் ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இத்தகைய வெறுப்புப் பேச்சுக்களின் மீது தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் மற்ற கட்சிகளின் மீது பாஜகவினர் கொடுக்கும் புகார்களுக்கு மட்டும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆம் ஆத்மி மற்றும் உத்தவ் தாக்கரேயின் சிவசேனா கட்சிகள் உருவாக்கிய தேர்தல் பாடல்கள் குறித்து பாஜக அளித்த புகாரின் அடிப்படையில் திருத்தம் செய்ய உடனடியாக உத்தரவிட்டது தேர்தல் ஆணையம். அந்த பாடல்களில் இருந்த ‘ஜெய் பவானி’ மற்றும் ‘இந்து’ என்ற வார்த்தைகள் மதத்தைக் குறிப்பிடுவதாக நீக்கச் சொன்னது தேர்தல் ஆணையம். அப்படியானால் பிரதமர் மோடியும், அமித் ஷாவும் ராமன் மற்றும் அனுமான் பெயரில் ஓட்டு கேட்பதையும் தடை செய்ய வேண்டுமென்று உத்தவ் தாக்கரே தேர்தல் ஆணையத்தில் முறையிட்டார். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பாரத ராஷ்டிர சமிதி தலைவர் கே. சந்திரசேகர ராவ் அவதூறான கருத்துகள் தெரிவித்ததாகக் கூறி 48 மணி நேரம் பிரச்சாரம் செய்ய தடை விதிக்கப்பட்டது. ஆனால் மோடியின் வெறுப்புப் பேச்சுக்கு எதிராக ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற சந்திரசேகர ராவின் கேள்விக்கு இதுவரை தேர்தல் ஆணையம் பதிலளிக்கவில்லை. காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி, சிவசேனா உத்தவ் தாக்கரே தரப்பு என பல்வேறு கட்சிகள் பாஜகவின் அப்பட்டமான வெறுப்புப் பேச்சுகளுக்கு எதிராகப் புகார் அளித்தபோதும் தேர்தல் ஆணையம் எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

சிபிஐ, வருமான வரித்துறை, அமலாக்கத்துறை போல தேர்தல் ஆணையமும் பாஜகவின் அடியாள் போல செயல்பட்டுக் கொண்டிருப்பதாக கடும் விமர்சனங்கள் வரத் தொடங்கியதை அடுத்து, மோடிக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட புகார்கள் குறித்து விளக்கமளிக்குமாறு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது. அதை பிரதமர் மோடிக்கோ அல்லது அவரின் அலுவலகத்திற்கோ அனுப்பாமல் பாஜக தலைவர் ஜே.பி.நட்டாவிற்கு அனுப்பியது. அதே சமயத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கேவுக்கும் ராகுல் காந்திக்கும் எதிராக நோட்டீஸ் அனுப்பி தனது விசுவாசத்தை அதிலும் நிரூபித்தது தேர்தல் ஆணையம். இத்தகைய விசுவாசத்தை எதிர்பார்த்துதான், தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்கிற குழுவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு ஒன்றிய அமைச்சரை மோடி அரசு இணைத்ததா என்ற கேள்வி இதில் எழாமல் இல்லை.

தேர்தல் பரப்புரையிலேயே சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக மிகவும் கீழ்த்தரமாக தரம் தாழ்ந்து பேசும் மோடி, மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அம்மக்களின் பாதுகாப்பு என்ன ஆவது என்பதை பேரச்சத்தோடு சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

# கழகக் கலந்துரையாடல் கூட்டம்



*சேலம் : தாரமங்கலம் நகர கழக கலந்துரையாடல் கூட்டம் 11.05.2024 அன்று பவளத்தானூர் சரவணன் இல்லத்தில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்திற்கு சரவணன் தலைமை தாங்கினார். பவளத்தானூர் தனசேகர் முன்னிலை வகித்தார்.*

*இதில் தாராமங்கலம் நகர கழக சார்பில் மே மாத இறுதிக்குள் “குடிஅரசு இதழ்” மற்றும் “சுயமரியாதை இயக்க” நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*இந்த கலந்துரையாடல் கூட்டத்தில் பவளத்தானூர் சரவணன், தனசேகர், கே.ஆர்.தோப்பூர் கண்ணன், நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை, இளம்பிள்ளை சேகர், நங்கவள்ளி நகர செயலாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

# மாநிலத்தில் 4–வது இடம்பெற்ற கழக மாணவர்



*கழகத் தோழர்கள் கொளத்தூர் சுதா - ராஜா இணையரின் மகன் இரா. சு. கதிரவன் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 496/500 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்கிறார்.*

*மாணவர் கதிரவன் கோவிலுக்கு போனதில்லை, வேண்டுதல் வைத்ததில்லை, பாதபூஜை நடத்தவில்லை, சிறப்பு யாக பூஜையில் பங்கேற்கவில்லை ஆசிரியர்களின் வழிகாட்டுதலோடு, தன்னம்பிக்கையோடு படித்து பத்தாம் வகுப்பில் 496 மதிப்பெண்களை பெற்று மாநிலத்தில் நான்காவது இடம் பிடித்திருக்கிறார்.*

*தேர்வில் வென்றதை அடுத்து கழகத் தலைவர் கொளத்தூர் மணியை தனது பெற்றோர்களுடன் நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றார்.*

# விஜயமங்கலம் விசு முடிவெய்தினார்



ஈரோடு வடக்கு : கழக பெருந்துறை ஒன்றியச் செயலாளர் விஜயமங்கலம் விசு உடல்நலக்குறைவால் 11.05.2024 அன்று அவரது இல்லத்தில் காலமானார். மறைந்த தோழர் விசுவின் உடலுக்கு கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வகுமார், வடக்கு மாவட்ட அமைப்பாளர் நிவாஸ், இரமேசு மற்றும் கழகத் தோழர்கள் மரியாதை செலுத்தினர். பின்னர் அவரது இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

குறிப்பு : விஜயமங்கலம் விசு அவர்களின் படத்திறப்பு – நினைவேந்தல் நிகழ்வு 23.05.2024 அன்று காலை மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று நினைவேந்தல் உரையாற்றுகிறார்.

# சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழா

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகர கழக சார்பில் ‘‘குடிஅரசு இதழ்’’ மற்றும் ‘‘சுயமரியாதை இயக்க’’ நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

நாள் : 25.05.2024 சனி

நேரம் : மாலை 5 மணி

இடம் : தாரமங்கலம் அண்ணா சிலை அருகில்

சிறப்புரை : கொளத்தூர் மணி,
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

ஏற்பாடு : தாராமங்கலம் நகர கழகம்

# பெரியார் முழக்க வளர்ச்சி நிதி!

1. சஞ்சய், வந்தவாசி – ரூ.1000/–
2. கார்த்திகேயன், திருப்பூர் – ரூ.1000/–
3. அறிவழகன், கடலூர் – ரூ.500/–

நன்கொடை மற்றும் சந்தா செலுத்த விரும்புவோர் QR Code–யை பயன்படுத்திக் கொள்ளலாம்.

UPI ID: viduthalaikr@oksbi

# ஆர்.என்.ரவிக்கும் சீமானுக்கும்
# கால்டுவெல் மீது கோபம் ஏன்?

மறைந்து அரை நூற்றாண்டுகள் ஆகிவிட்ட பெரியார்தான் இன்னும் காவிகளை கதற வைத்துக் கொண்டிருக்கிறார் என்றால், பெரியாருக்கு 12 வயதாக இருக்கும்போதே மறைந்துவிட்ட கால்டுவெலும் தன் பங்குக்கு கதற வைத்துக்கொண்டிருக்கிறார். கால்டுவெல் பெரியாரைப் போல நாத்திகர் இல்லை, பெரியாரைப் போல கடவுள் இல்லவே இல்லை என்று கூறவில்லை. பிறகு ஏன் காவிக்கூட்டம் அவரைக் கண்டு அஞ்சுகிறது என்றால், தனித்துவ 'தமிழ்'நாட்டுக்கான அடித்தளத்தில் அவருக்கும் மிகப்பெரிய பங்கு இருக்கிறது. செத்த மொழி சமஸ்கிருதத்தில் இருந்தே இந்திய மொழிகள் அனைத்தும் உருவானவை என்ற ஆரியக் கற்பிதங்களை உடைத்து, சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று நிறுவியவர் கால்டுவெல்.


## கால்டுவெல் மீது காழ்ப்புணர்ச்சி ஏன்?

உண்மையில் ஆர்.என்.ரவி கூறுவதுபோல இராபர்ட் கால்டுவெல் மதபோதகராகத்தான் சென்னைக்கு வந்திறங்கினார். ஆனால் அதனால்தான் ஆர்.என்.ரவி வகையறாக்களுக்கு கால்டுவெலின் மீது கோபம் என்றால் அது பெரும் நகைப்புக்குரியது. இன்றைக்கும் இந்தியாவில் கிருத்தவர்களின் மக்கள்தொகை என்பது 2.3%-ஆக மட்டுமே உள்ளது. இந்து மதத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையில் கிருத்துவத்திற்கு மதமாற்றம் நடந்திருக்குமானால் 200 ஆண்டுகளுக்கு மேலாகியும் கிருத்தவர்களின் மக்கள்தொகை உயரவில்லையே! அதேபோல இராபர்ட் கால்டுவெல் பல லட்சம் பேரை மதம் மாற்றிவிட்டார் என்று குற்றம்சாட்டுவதற்கும் எந்த ஆதாரமோ, தரவோ எவரிடத்திலும் இல்லை. எனவே அவர்களின் சிக்கல் அதுவல்ல, "இந்தியாவில் 2 இனங்கள் இருக்கின்றன. ஒன்று ஆரிய இனம், மற்றொன்று திராவிட இனம்" என்று அறுதியிட்டுச் சொல்வதற்கான ஆய்வுகளை கால்டுவெல் முன்வைத்தார். அதுதான் கால்டுவெல் மீதான காவிகளின் எரிச்சலுக்குக் காரணம்.

இராபர்ட் கால்டுவெலுக்கு மதத்தைத் தாண்டி, மொழியியல் ஆய்வுகள் மீது சிறுவயதில் இருந்தே பெரும் நாட்டம் இருந்தது. அது சென்னைக்கு வந்த பிறகு முளைத்ததல்ல. கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் கால்டுவெல் படித்துக்கொண்டிருக்கும்போதே ஐரோப்பிய சமய நூல்கள், நீதி நூல்களைத் தேடித்தேடி படித்தார். அப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் சர். டேனியல் சேண்ட்போர்ட் என்பவரின் பாடங்களால் மிகவும் ஈர்க்கப்பட்டிருந்தார். பேரசிரியர் டேனியல், கிரீக் மொழியின் சிறப்புகள், அதன் அருமை பெருமைகளைப் பிற மொழிகளுடன் ஒப்புமைப்படுத்தி விளக்கினார். அத்தகைய மொழியியல் ஆய்வுகள் மீதான இத்தகைய ஈர்ப்புப் பின்புலத்தோடே கால்டுவெல் சென்னைக்கு வந்தார்.

அதனால்தான் அவரால் இங்கு சமயப் பணிகளோடு தனது எல்லையை சுருக்கிக் கொள்ள இயலவில்லை. தமிழைக் கற்றறிந்தார். பிற மொழிகளில் வெளியான ஆய்வுகளையும் கற்று, ஏராளமான தரவுகளை சேகரித்தார். இப்படி அவர் 18 ஆண்டுகாலம் கொடுத்த உழைப்பின் விளைச்சலே, "திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூல். இதுவரை மொத்தம் 3 பதிப்புகள் வெளியாகியுள்ளன. முதல் பதிப்பு 1856-இல் இராபர்ட் கால்டுவெல் வெளியிட்டது. அதை அவரே மீண்டும் திருத்தம் செய்து 1875-இல் இரண்டாம் பதிப்பை வெளியிட்டார். ஜே.எல். வயட், டி.ராமகிருஷ்ண பிள்ளை ஆகியோரால் சில பகுதிகள் நீக்கப்பட்டு, 1913-இல் இலண்டனில் மூன்றாம் பதிப்பு வெளியிடப்பட்டது. இந்த மூன்றாம் பதிப்பை மறுபதிப்பாக சென்னைப் பல்கலைக்கழகம் 1956-இல் மீண்டும் வெளியிட்டது.


இதில் 1913-இல் நீக்கப்பட்ட பகுதிகளுக்கு முந்தைய பதிப்பை பேராசிரியர் பா.ரா.சுப்பிரமணியன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2021-இல் வெளியிட்டது. அவரது ஆய்வின் முக்கிய அம்சமே தென்னிந்திய மொழிக் குடும்பத்திற்கு 'திராவிட' என்ற பதத்தை பயன்படுத்தியிருப்பது. திராவிட இயக்கத்தின் மீதான ஒவ்வாமையால், திராவிட இயக்கம் ஒரு நூற்றாண்டாக இம்மண்ணில் செய்திருக்கிற பணிகளின் மீதான ஒவ்வாமையால் 'தமிழ் வேறு,



திராவிடம் வேறு' என்று இப்போதும் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். இரத்தப் பரிசோதனை செய்து தமிழரா இல்லையா என்று தரம் பிரிப்பவர்கள் அவர்கள்.

## தமிழும் திராவிடமும் வேறுவேறல்ல!

அவர்களுக்கு அப்போதே பதிலளித்துவிட்டார் கால்டுவெல். "திராவிட என்னும் சொல் தமிழ் என்னும் சொல்லோடே தொடர்புபடுத்தக்கூடியதே" என்றும், "தமிழ் என்ற சொல்லில் இருந்தே திராவிடம் என்ற சொல் உருவாகியிருக்க வேண்டும்" என்றும் தனது ஆய்வில் நிறுவியவர் கால்டுவெல். தமிழ்- தமிழா- தமிலா- த்ரமிளா- த்ரமிடா- திராவிடா என்று திரிந்திருக்க வேண்டுமென்று கருதுவதில் தவறில்லை என்றும் கூறுகிறார். அதனால்தான் கால்டுவெல் மீது ஆர்.என்.ரவிக்கு இருக்கும் அதே கோபம், சீமானுக்கும் மணியரசனுக்கும் இருக்கிறது. ஒருகாலத்தில் தென்னிந்திய மொழிகளைச் சுட்டுவதாக இருந்த திராவிடம் என்ற சொல், ஆரியப் பண்பாட்டுக்கு எதிராக பெரியார் தொடங்கிய அரசியல் யுத்தத்தில் திராவிட இனமாக உருவகப்படுத்தப்பட்டு, இன்றைக்கு திராவிடப் பண்பாடாகவும், திராவிட மாடல் அரசாகவும் பல்வேறு பொருள்களில் விரிவடைந்து இருக்கிறது.



ஈராயிரம் ஆண்டுகளாக பார்ப்பனர்கள் இம்மண்ணில் வாழ்ந்தாலும், சமூக ரீதியாக தங்களை தனித்துவமாகக் காட்டிக்கொள்வதில், தங்களுக்கு என தனித்த பண்பாடு இருக்கிறது என வெளிப்படுத்திக்கொள்வதில் அவர்கள் தயங்குவதில்லை. அவர்களுடைய ஆரியப் பண்பாட்டை நம்மீது திணிக்கவும் அவர்கள் தயங்குவதில்லை. அந்தத் திணிப்பில் இருந்து விலகி, நம் சுய அடையாளத்தோடு வாழ நமக்கிருக்கும் இருக்கும் ஒற்றை ஆயுதம் 'திராவிடம்'. அதனால்தான் பெரியார் திராவிடம் என்ற அடையாளத்தை கையிலெடுத்தார். பெரியாரின் இம்முடிவு சரியானதே என்பதற்கு, சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பே நிறுவப்பட்ட ஆய்வாகவே இராபர்ட் கால்டுவெலின் ஒப்பிலக்கணம் திகழ்கிறது.

திராவிட மொழிக் குடும்பத்திற்கும்- சமஸ்கிருத மொழிக்கும் இடையிலான வேறுபாடுகளை கால்டுவெல் சுட்டிக் காட்டியிருக்கும் அதேவேளையில், ஆஸ்திரேலிய பழங்குடியின மொழிகளுக்கும், செமிட்டிக் மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையில் இருக்கும் ஒற்றுமைகளையும் சுட்டிக்காட்டியுள்ளார். அதேபோல பின்னிஷ், துருக்கி, மங்கோலியம் உள்ளிட்ட சித்திய மொழிக் குடும்பத்திற்கும் திராவிட மொழிகளுக்கும் இடையில்கூட ஏதேனும் ஒற்றுமை இருக்கலாம் என்பதும் அவரது கருத்து.

## சமஸ்கிருத கருத்துருவாக்கத்தை தகர்த்த கால்டுவெல்

திராவிட மொழிக்குடும்பத்தில் ஒவ்வொரு மொழிக்கும் இடையில் இருக்கும் ஒற்றுமை, வேற்றுமை என்ற கால்டுவெலின் ஆய்வும் முக்கியமானது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சமஸ்கிருதச் சொற்கள் கலந்திருக்கின்றன என்பது உண்மையே. ஆனால் தமிழில் இருந்து பிரிந்து சென்ற கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளுக்கு சமஸ்கிருதத்தின் துணை தேவைப்படலாம், தமிழுக்கு சமஸ்கிருதத்தின் துணை தேவையே இல்லை, தனித்தியங்கும் ஆற்றல் கொண்ட சொற்கள் தமிழில் ஏராளம் உள்ளன என்றும் நிறுவினார் கால்டுவெல்.

கால்டுவெலுக்கு முன்பிருந்தே திராவிட மொழிக்குடும்பம் குறித்தான கருத்தாக்கங்கள் இருந்தே இருக்கின்றன. கிபி 14-ஆம் ஆண்டில் நூற்றாண்டில் வெளியான லீலாதிலகம் என்ற மலையாள இலக்கண நூல், "தமிழும், மலைநாட்டுத் தமிழும், துளு, தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளும் ஒரே அமைப்புடையன, வடமொழி வேறு" என்று கூறுகிறது. "செந்தமிழும், வடமொழியும் ஆனான் காண்" என்று ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடியதாகக் குறிப்புகள் உள்ளன. "தமிழும் வடமொழியும் சிவன் கற்பித்த வேறு வேறு அமைப்புடைய மொழிகள்" என்று பரஞ்சோதி முனிவர் பாடியுள்ளார். வீரமாமுனிவரும் தமிழை திராவிடம் என்றே வழங்கியிருக்கிறார். எல்லீஸ், சாமுவேல் பிள்ளை போன்றவர்களும் கால்டுவெலுக்கு முன்பே திராவிடம் குறித்த கருத்தாக்கங்களை முன்வைத்துள்ளனர். ஆனால் கால்டுவெலின் ஆய்வுகள் மட்டும் அரசியலாக்கப்பட்டு, அவர் எதிர்க்கப்படுவதற்குக் காரணம், இந்தியாவில் மொழிவழித் தேசியக் கருத்தாக்கம் வலுப்பெற்ற காலத்தில் இவரது ஆய்வுகள் வெளியானதே.

ஆரிய - பார்ப்பனியம் சமூகப் படிநிலையில் உயர்ந்தது, மற்ற சமூகங்கள் தாழ்ந்தது என்ற வருணாசிரம கோட்பாட்டுக்கு எதிராக உருவானதே திராவிட அரசியல் கருத்தியல். அறிவியல் பார்வைக்கு ஒவ்வாத அந்த நகைமுரண் கோட்பாட்டை திராவிட அரசியல் கருத்துருவாக்கம் கேள்வி எழுப்புவதற்கு முன்பே, அந்தப் பணியை திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தொடங்கிவிட்டது. அதைவிட மிக முக்கியமானது, ஓர் ஒப்பிலக்கண நூல் மிகப்பெரிய சமூக, சமய, அரசியல் மாற்றத்தை உருவாக்குவதற்கான ஆயுதமாக அமையும் என்பதை கால்டுவெல் எண்ணியிருப்பாரா என்று தெரியவில்லை. எந்தவிதமான ஆய்வும் இல்லாமல், இந்திய மொழிகளின் தாய் 'சமஸ்கிருதம்' என்று நிறுவி வைக்கப்பட்டிருந்த ஆரிய கருத்துருவாக்கத்தை தனியொரு மனிதனாக கால்டுவெல் தகர்த்துவிட்டார் என்ற கோபமே இப்போதும் அவர்கள் எதிர்க்க, குமுறலை வெளிப்படுத்த ஒற்றைக் காரணம்.

**தகவல்கள்: 'தமிழுக்கு என்ன செய்தார் கால்டுவெல்' நூல்**

## நூல் குறிப்பு

தமிழுக்கு என்ன செய்தார் கால்டுவெல்

வெளியீடு : கருஞ்சட்டைப் பதிப்பகம்

விலை : ரூ.60/-

தொடர்புக்கு : 81229 46408

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ராகுல் - மோடி நேரடி விவாதம்

ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி மதன் பி.லோகுர், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அஜித் பி ஷா மற்றும் பத்திரிகையாளர் என்.ராம் ஆகிய மூவரும் இணைந்து ராகுல்காந்திக்கும் நரேந்திர மோடிக்கும் நேரடி விவாதத்தை ஏற்பாடு செய்தனர். அந்த அழைப்பை ராகுல் காந்தி ஏற்றுக்கொண்டார். ஆனால் மோடி தரப்பில் இருந்து எந்தவொரு பதிலும் வரவில்லை. இவர்கள் இருவரும் சந்தித்து உரையாடினால் எப்படி இருக்கும். ஒரு கற்பனை...



**ராகுல்** : நமஸ்தே.. விவாதத்திற்கு வந்துட்டிங்களே.! சபாஷ்!!

**மோடி** : விவாதமா? அதுக்கெல்லாம் நான் வரல, அப்படினா எனக்கு என்னென்னே தெரியாது. பத்து வருட நாடாளுமன்ற அனுபவத்தில சொல்றேன். நான் எந்த விவாதத்திலாவது பேசிருக்கேனா? சொல்லுங்க பாப்போம். வாய்ப்பில்லை ராஜா, சாரி இளவரசரே..!

**ராகுல்** : அப்போ இங்க எதுக்கு வந்துருக்கீங்க, ஷோ நடத்தவா?

**மோடி** : பயந்துக்கிட்டேனு நெனைச்சு மக்கள் உண்மையை புரிஞ்சுகிட்டாங்கன்னா, நான் விவாதத்துக்கு அஞ்சாத சிங்கம் என்று ஷோ காட்ட வந்துருக்கேன்..

**ராகுல்** : எப்படியோ வந்துட்டிங்க.. சரி உங்க கேள்விகளுக்கு நான் பதில் தர தயார்! என்னுடைய கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லுவீங்களா?

**மோடி** : இதுக்கெல்லாம் வேற ஆளை பாருங்கய்யா! நான் மட்டும் பேசித்தான் எனக்கு பழக்கம். இரண்டே இரண்டு பாயிண்ட் தான். நாங்கள் இந்து. முஸ்லீம் எங்கள் விரோதி. எங்களை எதிர்த்தால் அவர்கள் எல்லாம் இந்து விரோதிகள், பாகிஸ்தான் ஆதரவாளர்கள். அவ்வளவுதான். நான் பிரதமராக தொடர்வதற்கு இது தெரிந்தாலே போதும்...

**ராகுல்** : பத்தாண்டுகளாக என்ன சாதனைகளை செய்திருக்கீங்க. அதை பேசவே மாட்டீங்களா?

**மோடி** : நான் எதுக்கு பேசனும்? போய் அம்பானி கிட்ட கேளுங்க. அதானி கிட்ட கேளுங்க.. ராம பகவான் கிட்ட கேளுங்க... அவங்க பதில் சொல்லுவாங்க.!

**ராகுல்** : ஆக, மக்களிடம் கேட்க வேண்டாம்னு சொல்றீங்க.. வேலைவாய்ப்பு கிடைக்கலனு மக்கள் கதறுராங்களே அது தெரியுமா?

**மோடி** : எதுக்கு கதறனும். நான் தான் பகோடா விற்க சொன்னேன்ல அது போதாதா? நாங்க என்ன வேலையை வெச்சுக்கிட்டா தர மாட்டேங்கிறோம். இப்போ கூட இஸ்ரேல் நாட்டுக்கு இந்துக்களை வேலைக்கு அனுப்புறோமே!

**ராகுல்** : உள்நாட்டில் வேலை கேட்டால் போர் நடக்கும் நாட்டுக்கு போக சொல்றீங்க. எதிர்க்கட்சிகளை சந்திக்க பயந்து நாடாளுமன்றத்துக்கே நீங்க வரமாட்டிங்க. இப்போ நம்ம இளைஞர்களை மட்டும் போர்க்களத்துக்கு தள்ளி விடுரீங்க. நல்லா இருக்குதே உங்க நியாயம். நீங்க நாட்டின் சொத்துக்களை அம்பானிக்கும் அதானிக்கும் விற்பீங்க, ஆனால் எங்க இளைஞர்கள் மட்டும் பகோடா விற்கனுமா?

**மோடி** : யாருக்கு விற்கிறோம்.. இந்துக்களுக்கு தானே, பாகிஸ்தானுக்கா விற்கிறோம்?

**ராகுல்** : பாதிக்கப்படுகிற ஏழை எளிய மக்கள், பெட்ரோல், டீசல், சிறு குறு தொழில் நடத்துபவர்கள், ஜிஎஸ்டி கட்டுபவர்கள் எல்லாம் இந்துக்கள் தானே. அவர்களை எல்லாம் வதைக்கலாமா?

**மோடி** : இப்போ சொல்றேன் கேட்டுக்கோங்க.. எங்க பாஜக ஆதரவாளர்கள் மட்டுமே உண்மையான இந்துக்கள். நாங்கள் தான் கோயில் கட்ட வேண்டும் என்று ராம பகவானே எங்களுக்கு ஆணையிட்டார். பகவான் எங்களை மட்டுமே இந்துக்கள் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

**ராகுல்** : ஏற்கனவே இந்துக்கள் ஜாதிவாரியாக பிரிந்து கிடக்கிறார்கள். இப்படி நீங்களே கட்சியை வைத்து இந்துக்களை பிளந்து, இந்துக்களை மைனாரிட்டி ஆக்கிட்டிங்களே..

**மோடி** : இந்துக்களை இரண்டாம்தர குடிமக்களாக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அவர்கள் முதல்தர குடிமக்களாக இருக்க வேண்டும். அதற்கு இந்துக்கள் எங்கள் கட்சியில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். எங்களுக்கு மட்டுமே ஓட்டு போட வேண்டும். அவர்கள் தான் முதல்தர குடிகள்.

**ராகுல்** : சனாதனம் தான் இந்துக்களை பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர என்று நான்கு தரங்களாக வைத்திருக்கிறது. அதை எதிர்த்து நீங்கள் பேசுவீங்களா?

**மோடி** : இதோ பாருங்க.. எனக்கு சனாதனம் என்ற ஒற்றைச் சொல் மட்டுமே தெரியும். அதற்கு அர்த்தமெல்லாம் எனக்கு தெரியாது. அதற்கான தேவையும் இல்லை. ஒரு பிரதமராக இருப்பதற்கு இதுவே போதும்..

**ராகுல்** : பால ராமன் சிலையை பிரதிஷ்டை செய்யும் உரிமை உங்களுக்கு இல்லை என்று சங்கராச்சாரிகள் எதிர்த்தார்களே, அதாவது உங்களுக்கு தெரியுமா?

**மோடி** : அதற்கு தான், ஒரு வாரம் பிரதமர் பதவியில் இருந்து விடுப்பு எடுத்துக்கொண்டு விரதம் இருந்தேன். சங்கராச்சரிகளின் கட்டளையின் படி அழுக்கில் கிடந்த நான் என்னை நானே தூய்மைப்படுத்திக் கொண்டதால் பால ராமன் என்னை ஏற்றுக்கொண்டார். அவரின் கண்கள் வழியாக அதை எனக்கு உணர்த்தினார். அப்போது ஒரு தெய்வீகத்தை உணர்ந்து மெய்மறந்து சிலிர்த்து போனேன். பிறகு மீண்டும் பிரதமராகி இப்போது பிரச்சாரத்துக்கு வந்துள்ளேன். நீதான் இந்த பாரதத்தின் நிரந்தர பிரதமர் என்று பகவான் ஆணையிட்டுவிட்டார்.

**ராகுல்** : பிறகு எதுக்கு தேர்தல் நடத்துரீங்க.. ஊர் ஊராக போய் மதவெறுப்பை கக்குறீங்க?

**மோடி** : நானா பேசுகிறேன். அல்ல.. அல்ல.. பகவான் ராமன் தான் என்னை அப்படி பேச வைத்திருக்கிறார். தேர்தல் ஆணையத்தை உன் கட்டுப்பட்டிற்குள் கொண்டுவந்து விடு என்று ஆணையிட்டார். கெஜ்ரிவாலை கைது செய்து உள்ளே போடு என்று கூறினார். ஹேமந்த் சோரனை வெளியே விட்டு வைக்காதே என்று உத்தரவிட்டார். மணிப்பூர் பற்றியெறிந்தாலும் பரவாயில்லை. அந்த பக்கம் தலைவைத்து படுக்காதே என்றார். காங்கிரஸ் கட்சியின் வங்கி கணக்குகளை உடனே முடக்கு, இல்லையென்றால் தேசத்திற்கே ஆபத்து என்று கறாராக கட்டளையிட்டார். அதுமட்டுமா? நாங்க ஆட்சி செய்யாத மாநிலங்களை முடக்கு, நிதி தராதே! அமலாக்கத்துறையை அனுப்பு! அங்கே வாழும் இந்துக்கள் எனது உண்மையான பக்தர் அல்ல, அவர்கள் இராவணனின் கைக்கூலிகள். பாஜகை எதிர்க்கும் இந்துக்கள் எனது பக்தர்கள் அல்ல என்று எனது கனவில் வந்து கூறினார். புயல் வெள்ள பாதிப்புகள் வந்தாலும் பாஜக ஆளாத மாநிலங்களுக்கு நிதி தராதே! பாஜக ஆளாத மாநிலத்தில் வசிக்கும் இந்துக்கள், இந்துக்களே அல்ல என்று இராம பகவான் உறுதியாக கூறிவிட்டார். அந்த கட்டளையை ஏற்றுதான் நான் அப்படியே செயல்படுகிறேன். இப்போதுதான் ராமராஜ்ஜியமே துவங்கி இருக்கிறது. இவ்வளவு பேசுகிறீர்களே, நீங்களெல்லாம் அயோத்திக்கு வந்து இராம பகவானை வழிபட்டீர்களா? மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இராம பகவானே உங்களை வெற்றிபெற விடமாட்டார்.

**ராகுல்** : இது ஜனநாயக, மதச்சார்பற்ற நாடு. இங்கு வாழ்கிற அனைத்து குடிமக்களையும் இப்படி மதத்தால் பிளவுபடுத்துகிறீர்களே?

**மோடி** : குடியுரிமையிலேயே மதத்தை புகுத்தியது நாங்கள் தான். அடுத்து குடிமக்களையும் மதத்தால் பிளவுபடுத்தி இராமராஜ்ஜியத்தை அமைப்பது தான் எங்கள் இலட்சியம். அதற்காக கட்சிகளை உடைப்போம். ஆட்சிகளை கவிழ்ப்போம். ஊழல் செய்தவர்களை மிரட்டி கட்சியில் சேர்ப்போம். வழக்குகளில் இருந்து அவர்களை விடுவிப்போம். பாலுறவு வன்முறைகளில் கை தேர்ந்தவர்களை கட்சியில் சேர்த்து அவர்களுக்கு பதவிகளை வழங்குவோம். அவர்களை தேச பக்தர்களாக போற்றுவோம்.

**ராகுல்** : மக்களுக்கு வாழ்வுரிமையை தரமாட்டீர்கள். அதற்கான கணக்கெடுப்பை நாங்கள் நடத்தச் சொன்னால் பாகிஸ்தானிகள் என்று அலறுகிறீர்கள். இந்த தேர்தலில் பாகிஸ்தானில் இருந்து யாராவது போட்டியிடுகிறார்களா? சரி இந்திய கிராமங்களை சீனா ஆக்கிரமித்து வைத்து அதற்கு சீனப் பெயர்களை சூட்டியுள்ளதே, அதைக் கண்டித்து பேசமாட்டீர்களா?

**மோடி** : அசுக்கு.. புசுக்கு.. இப்படியெல்லாம் உசுப்பேத்தி எங்களை சீனாவுக்கு எதிராக தூண்டி விட பார்க்கிறீர்களா? வலிமையான சீனாவை எதிர்த்தால் என்ன நடக்கும் என்று எங்களுக்கு நன்றாக தெரியும். நாங்கள் என்ன அவ்வளவு முட்டாள்களா? பால இராமனே வந்து சீனாவை எதிர்க்க ஆணையிட்டாலும் நாங்கள் எதிர்க்க மாட்டோம்.

**ராகுல்** : நடந்து முடிந்த வாக்குப்பதிவில் மக்கள் உங்களை ஏற்கவில்லை என்ற செய்திகள் எல்லாம் வருகிறதே, அதாவது உங்களுக்கு தெரியுமா?

**மோடி** : அப்படியெல்லாம் இராம பகவான் எங்களுக்கு துரோகம் செய்ய மாட்டார். அப்படி துரோகம் செய்தால் இராமனை கைவிட்டுவிட்டு கிருஷ்ணனுக்கு தாவிவிடுவோம். கிருஷ்ணனுக்கு கோயில் கட்ட தொடங்கிவிடுவோம். கிருஷ்ணனை வைத்து நாங்கள் ஆட்சிக்கு வருவோம்.

**ராகுல்** : ராமன் இல்லாவிட்டால் கிருஷ்ணன், கிருஷ்ணன் இல்லாவிட்டால் அனுமான், அனுமான் இல்லாவிட்டால் சிவன். எந்த காலத்திலேயும் அரசியல் சட்டம் ஒன்று இந்த நாட்டில் உள்ளதை ஏற்றுக்கொள்ளவே மாட்டிங்க, அப்படித்தானே..

**மோடி** : எங்களுக்கு அந்த குப்பைகள் எல்லாம் வேண்டாம். பாரத மாதாவும், சனாதனமும், மதவெறியும் இருந்தாலே போதும் நாங்கள் தான் உண்மையான தேச பக்தர்கள். சட்டங்கள் ஒழிக! சனாதனம் வாழ்க! பாரத் மாதா கி ஜே!

**கோடங்குடி மாரிமுத்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted May 17, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran